

தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (20.03.2025) வனத் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் வனத் துறை மற்றும் கதர்த் துறை ஆகிய துறைகளின் 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான வரைவு கொள்கை விளக்க குறிப்பு அறிவிப்புகள் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹு, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை செயலாளர் வே. அமுதவல்லி, வனத் துறை முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனஉயிரினம்) முனைவர் நாகநாதன், கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு) எஸ். ராமசுப்பிரமணியன், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனஉயிரினக் காப்பாளர் ராகேஷ்குமார் டோக்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, பசுமைவழிச் சாலை முகாம் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (20.03.2025) கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி தலைமையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் 2025–2026 ஆம் ஆண்டிற்கான வரைவு கொள்கை விளக்க குறிப்பு, சட்டமன்ற அறிவிப்புகள் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் – முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி

# நாடாளுமன்றத்தில் தொகுதி மறுசீரமைப்பு குறித்த போராட்டம் தொடரும்!

## கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி பேட்டி!



புதுடெல்லி, மார்ச் 22- நியாயமான தொகுதி மறுசீரமைப்பு பற்றிய ஒரு உறுதியை ஒன்றிய அரசு கொடுக்கும் வரை, ஒன்றிய அரசாங்கம் அதைப் பற்றி தெளிவுபடுத்தும் வரை நாடாளுமன்றத்தில் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என திமுக துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான வாசகங்கள் அடங்கிய டி ஷர்ட்டுகள் அணிந்து இன்று மார்ச் 20 ஆம் தேதியன்று திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தனர்.

'நியாயமான தொகுதி மறுசீரமைப்பு, தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்' என்ற வாசகம் அச்சிடப்பட்ட வெள்ளை டிசர்ட்களை அணிந்து திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட எம்.பி.க்கள் அவையில் நுழைந்தனர். சபாநாயகர் இந்த வாசகங்கள் அணிந்த உடைக்கு அனுமதி மறுத்ததால், மக்களவை ஒத்தி வைக்கப்பட்டது.

தொடர்ந்து திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட கூட்டணிக் கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது செய்தியாளர்களிடம் திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவரும், திமுக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி கூறியதாவது:

"திராவிட முன்னேற்றக் கழகம், மற்றும் கூட்டணி இயக்கங்கள் நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் முன் வைத்திருக்கக்கூடிய மிக முக்கியமான தொகுதி மறுவரையறை பிரச்சனையை நாடாளுமன்றத்தில் எழுப்பிக் கொண்டிருக்கிறோம்.

அதை பற்றி நாடாளுமன்றத்திலே விவாதம் நடத்த வேண்டும் என்ற கோரிக்கை வைத்துக் கொண்டே இருக்கிறோம். ஆனால் அதைப் பற்றி விவாதிக்கவோ, அதைப் பற்றி பேசவோ தொடர்ந்து நாடாளுமன்றத்திலே அனுமதி இல்லை என்ற நிலையிலே... இன்று நாடாளுமன்ற வாயிலிலே ஆர்ப்பாட்டம் நடத்தி விட்டு, உள்ளே சென்று அவைக்குள் போய் அதைப் பற்றி பேச வேண்டும் என்று நாங்கள் எழுந்து கோரிக்கை வைத்தோம்.

அப்போது முன்னெப் பொழுதும் இல்லாத வகையிலே புதிதாக அவை தலைவர் எங்களுடைய உடைகளிலே குறையை கண்டுபிடித்து டிஷர்ட் அணிந்து வரக்கூடாது என்றும் அவைக்கு என்று ஒரு புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சட்டத்தை எங்கள் முன்னால் நீட்டி நீங்கள் சட்டையை மாற்றவில்லை என்றால் அவை நடக்காது என்று ஒரு விஷயத்தை முன் வைத்தார்.

நாங்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காரணத்தால் அவை ஒத்தி வைக்கப்பட்டது. அடுத்த முறையும் அவை கூடிய பொழுது நாங்கள் சட்டையை மாற்றாமல் எங்களுடைய கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தினோம். அதனால் இன்று நாள் முழுவதும் அவை ஒத்தி வைக்கப்பட்டதாக அறிவித்தார்கள்.

இதற்கு முன்னால் பல முறை பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து விவாதங்கள் நடந்த பொழுது, அமளி ஏற்பட்டபொழுது... எதிர்க்கட்சிகளை சார்ந்தவர்கள் தங்களுடைய கருத்துக்களை சொல்லக்கூடிய வகையிலே மாஸ்க் போட்டுக் கொண்டு அவைக்கு வந்திருக்கிறார்கள். அதிலே வாசகங்கள் இருந்திருக்கின்றன. தாங்கள் சொல்லக்கூடிய முன்வைக்கக் கூடிய கருத்துக்கள் தாங்கிய வாசகங்கள் அணிந்து வந்திருக்கிறார்கள்

இப்பொழுது கூட ஆளுங்கட்சியில் இருக்க கூடியவர்கள் அவர்களுடைய நம்பிக்கைகளை கருத்துக்களை சொல்லக்கூடிய... அவற்றை வலியுறுத்தக்கூடிய கருத்துக்களை எழுத்துகளாகக் கொண்ட சால்வைகளாக அவர்கள் போட்டுக் கொண்டுதான் இன்றும் அவையிலேயே இருக்கிறார்கள்.

**ஜனநாயக விரோதச் செயல்!**

ஆனால் அவர்களை எல்லாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய அவைத் தலைவர், எங்களை மட்டும் வெளியேறச் சொல்கிறார், எங்களை மட்டும் உடையை மாற்றிக் கொண்டு வர வேண்டும் என்று கட்டளையிடுகிறார். இதை ஜனநாயக விரோதமான ஒரு செயலாக தான் பார்க்க முடிகிறது.

எதிர்க்கட்சிகளே இல்லாமல் ஒரு அவையை நடத்த வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அவர்கள் இருக்கிறார்கள். அவையில் எதிர் கருத்துக்களே இல்லாமல், வாழ்க வாழ்க என்று அவர்களைப் போலவே நாங்களும் கோஷம் இட்டுக் கொண்டிருந்தால் அவை அமைதியாக நடப்பதாக அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். அவை சிறப்பாக நடப்பதாக ஏற்றுக்கொள்வார்கள். அவர்களுடைய கருத்துக்களுக்கு எதிரான கருத்துக்களை நம்முடைய கொள்கை சார்ந்த ஒரு விஷயத்தை முன் வைத்தால் அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

**சென்னையில் நாளை கூட்டம்!**

அதனால் தான் நாடாளுமன்றத்தின் நாட்கள் கூட தொடர்ந்து இந்த ஆட்சியிலே குறைந்து கொண்டே வருகிறது. பிரதமர் அவையிலே இருக்கக் கூடிய நாட்களை, அவர் அவைக்கு வரக்கூடிய நாட்களை விரல்விட்டு கூட எண்ண முடியாது. அந்த அளவுக்கு குறைவான நாட்கள் தான் நம்முடைய நாட்டின் பிரதமரே அவையில் இருக்கிறார். நாடாளுமன்றத்தின் மீது அவர்களுக்கு என்ன மரியாதை இருக்கிறது என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ள முடியும்.

வரக்கூடிய 22ஆம் தேதி நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள், நாடு முழுவதும் தொகுதி மறுசீரமைப்பு பிரச்சினையால் பாதிக்கப்படும் மாநிலங்களின் முதலமைச்சர்களை, தலைவர்களை கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்காக சென்னைக்கு அழைத்திருக்கிறார்கள்.

பல மாநில முதல்வர்கள், தலைவர்கள் கலந்து கொள்ளக்கூடிய ஒரு நிகழ்ச்சி அங்கு நடைபெற இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சூழலிலே நாளை நாடாளுமன்ற வளாகத்தில் வெளி வாசலில் ஒரு ஆர்ப்பாட்டம் நிச்சயமாக நடக்கும். அதைத் தொடர்ந்து அவையிலும் இந்த கருத்தை நாங்கள் விவாதிக்க வேண்டும் என்று குரல் எழுப்புவோம்.

அவர்கள் அனுமதிப்பார்களா இல்லையா என்பது ஒரு மிகப்பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது. ஆனால் திராவிட முன்னேற்ற கழகம் எங்களுடைய முதலமைச்சர் சொல்லியிருப்பதற்கு இணங்க, இதைத் தொடர்ந்து எடுத்துச் செல்வோம். நியாயமான தொகுதி மறுசீரமைப்பு பற்றிய ஒரு உறுதியை அரசு கொடுக்கும் வரை, ஒன்றிய அரசாங்கம் அதைப் பற்றி தெளிவுபடுத்தும் வரை இந்த போராட்டம் தொடர்ந்து நடைபெறும்".

இவ்வாறு கனிமொழி கருணாநிதி பேட்டியளித்தார்.

### அ.தி.மு.க. ஆட்சியில் நஷ்டத்தில் இருந்த மின்சாரத் துறையில் வாங்கிய கடனுக்கு வட்டிசெலுத்தி –

# இழப்பீட்டைச் சமாளித்து தற்போது மின்சார வாரியம் சிறப்பாகச் செயல்படுகிறது!

## சட்டப்பேரவையில் – துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி விளக்கம்!



சென்னை, மார்ச் 22 - சட்டப்பேரவையில் நேற்று விவாதத்தில் குறுக்கிட்டு விளக்கமளித்த மின் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, "அ.தி.மு.க. ஆட்சியில் நஷ்டத்தில் இருந்த மின்சாரத் துறையில் வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்தி இழப்பீட்டைச் சமாளித்து, தற்போது மின்சார வாரியம் சிறப்பாகச் செயல்படுகிறது" என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கூறியதாவது:-

ஐந்து ஆண்டு கால ஆட்சியில் மின் கட்டண மானியமாக 40,225 கோடி ரூபாய் வழங்கியுள்ளார்கள். ஆனால் திராவிட மாடல் ஆட்சியினுடைய முதலமைச்சர் தளபதி அவர்கள் இந்த 4 ஆண்டுகளில் ஏறத்தாழ 68,407 கோடி ரூபாய் மின் கட்டணம் மானியமாக தமிழ்நாடு அரசினுடைய நிதியைக் கொடுத்து மின்சார வாரியத்தை காபாற்றியிருக்கிறார்கள். பொதுவாக அரசைப் பொறுத்தவரைக்கும், *grants* கொடுக்கிற போது, கடந்த கால ஆட்சியில் 5 ஆண்டுகளில் அவர்கள் கொடுத்தது வெறும் 25,128 கோடி. இப்போது முதலமைச்சர் அவர்கள் 64,890 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு கொடுத்து, மின்சார வாரியத்தை மேம்படுத்த வேண்டுமென்று உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள்.

**குறைக்கப்பட்ட கடன் சுமை!**

பொதுவாக கடந்த காலங்களில் வாங்கியிருக்கக்கூடிய கடன்-அந்தக் கடனுக்கான வட்டி செலுத்துவதே ஆண்டுக்கு சுமார் 16,500 கோடி ரூபாய் அளவிற்கு மின்சார வாரியம் நீங்கள் வாங்கிய கடன். அதற்காக மின்சார வாரியம் வட்டி செலுத்திக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, புதிய மின் திட்டங்களுக்கு நிறைவேற்று வதற்காக பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, அந்த மின் திட்டங்களுடைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான பணிகளும் தொடங்கப்பட்டிருக்கின்றன. எனவே, இந்த 4 ஆண்டுகளில் புதிதாக ஏதோ மின்சார வாரியத்திற்கு கூடுதலாக கடன் ஏற்பட்டு, புதிய கடன் சுமை ஏற்பட்டதைப்போல இங்கே உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றார். கடந்த காலங்களில் வாங்கப்பட்ட கடன் அப்படியே இருக்கின்றன. அதற்கான வட்டியை மின்சார வாரியம் செலுத்திக் கொண்டிருக்கிறது. கூடுதலாக தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்தவரை இவருடைய ஆட்சியில் 12,000 கோடி ரூபாய் இழப்பு என்று சொன்னார்கள். இப்போது கடந்த ஆண்டு 2024-25 வரையில் 338 கோடி ரூபாய் மட்டும் தான் கடன் ஏற்பட்டிருக்கிறது. அந்தளவிற்கு மின்சார வாரியத்தில் சிக்கனமான செலவுகளை மேம்படுத்தி, புதிய திட்டங்களினுடைய செலவினங்களை மிகச் சிறப்பாக அதனை முன்னெடுத்து, கையில்லெடுத்து, சிறப்பான பணிகளை செய்வதன் மூலமாக இந்தளவிற்கு மின்சார வாரியத்தை மேம்படுத்தி, கடந்த காலங்களில் ஏற்பட்ட கடன் சுமைகளை யெல்லாம் முழுவதுமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல கடந்த காலங்களில் இருந்து சம்பளம் உட்பட உதிரி பாகங்கள் உட்பட, நிலகரி உட்பட அதனுடைய விலைகள் ஏறியிருக்கின்றன. அதுவும் உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். தெரிந்திருந்தாலும்கூட அந்தக் கருத்துகளை முன் வைக்கின்றார். எனவே, மின்சார வாரியத்தை பொறுத்தவரை கடந்த காலங்களில் ஏற்பட்ட அந்த நஷ்டத்திற்கு இப்போது மின்சார வாரியம் வட்டிகளை செலுத்திக் கொண்டிருக்கிறது. கூடுதலாக அந்த இழப்புகளைத் தவிர்த்து, மின்சார வாரியம் இப்போது சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதேபோல, விவசாயிகளுக்கும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டது பற்றி சொன்னார். தயவு செய்து மட்டும் அந்த உண்மையைச் சொல்லுங்கள். 2021 சட்டமன்றத் தேர்தல் அறிவிப்பிற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக அரசாணை வெளியிட்டீர்கள். *MLA Election announce* செய்கிறார்கள். அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக, 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்படும் என்ற ஓர் அறிவிப்பை வெளியிட்டு, அதற்கான அரசாணைகளை வெளியிட்டீர்கள். ஆனால் அந்த மும்முனை மின்சாரம் வழங்குவதற்கான எந்த வித அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும் பணிகளையும் நீங்கள் மேற்கொள்ளவில்லை. 24 மணி நேரமும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்றால் *evening peak* ஆக இருக்கும், *morning peak* ஆக இருக்கும், அந்த இடங்களில் *overload* வரும். அதற்கான எந்தவிதமான கட்டமைப்பையும் மேற்கொள்ளாமல், அவசர கோலத்தில், தேர்தல் தேதி அறிவிப்பதற்கு, இரண்டு நாட்களுக்கு முன்பாக மும்முனை மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். இப்போது முதலமைச்சர் அவர்கள் அதற்கான அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காகத்தான் இந்த புதிய துணை மின் நிலையங்கள், புதிய மின் மாற்றிகளை அமைப்பதற்கான பணிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

**மும்முனை மின்சாரம்!**

அதேபோல டெல்டா பகுதிகளில் 8 மணி நேரம் என்ற சொன்னார். 16 மணி நேரம் மும்முனை மின்சாரம் முழுவதுமாக வழங்கப்பட்டிருக்கின்றன. எந்த இடத்திலும் தடையில்லாத மும்முனை மின்சாரம் 16 மணி நேரம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, கடந்த காலங்களில் தயவு செய்து விவசாய பெருமக்களிடத்தில் ஒரு தவறான கருத்தை எடுத்து செல்லவேண்டாம். அவருடைய ஆட்சியில் மும்முனை மின்சாரம் 24 மணிநேரம் வழங்கப்பட்டது என்ற கருத்து முற்றிலும் தவறானது. தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக அரசாணை மட்டுமே வெளியிடப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்டது. அறிவிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் அரசாணையே வெளியிடுகிறீர்கள். தேர்தல் தேதி அறிவிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகத்தான் அரசாணை வருகிறது. அப்போதுதான் அறிவிப்புகளே வருகிறது.

எங்கு மும்முனை மின்சாரம் கொடுக்க முடியும். எந்த இடங்களிலும் 24 மணிநேரம் விவசாயிகளுக்கான மும்முனை மின்சாரம் வழங்கப்படவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்பாக அரசாணை வெளியிடப்பட்டதே தவிர, வெறும் காகிதமாகத்தான் இருந்தது. மின்வாரியத்தில் அரசாணைகள் காகித வடிவத்தில் மட்டும்தான் இருந்தது. இப்பொழுது 16 மணி நேரம் தடையில்லாத மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றன. 24 மணிநேரமும் வழங்குவதற்கான அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான பணிகளை மின்வாரியம் எடுத்து, தற்போது அந்த பணிகளை செய்து கொண்டிருக்கிறது.

உங்களுடைய *period*-ல் 5 வருடத்தில் FL2 எத்தனை கொடுத்தீர்கள் என்று சொல்லுங்கள். நீங்கள் கொடுக்கவில்லையென்று சொல்லுங்கள். நாங்கள் ஒன்றுகூட கொடுக்கவில்லை, நீங்கள் கொடுத்துவிட்டீர்கள் என்று சொல்லுங்கள். அதாவது, குற்றச்சாட்டுகளைச் சொல்ல வேண்டுமென்பதற்காக, தவறான கருத்துகளைச் சொல்லக்கூடாது. 2021 தேர்தல் அறிக்கையை எடுத்துப் பாருங்கள், படித்துப் பாருங்கள். டாஸ்மாக் சம்பந்தமாக ஏதேனும் அதில் வாக்குறுதிகள் இருக்கின்றனவா என்று பாருங்கள். ஒரு வாக்குறுதிகூட அதில் இடம்பெறவில்லை.

**மூடப்பட்ட மதுக்கடைகள்!**

இருந்தாலும், தமிழ்நாட்டின் நலன் கருதி முதலமைச்சர் அவர்கள் 500 மதுக்கடைகளை குறைப்பதற்கான உத்தரவுகளை வழங்கி, 603 மதுக்கடைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே பள்ளிகள், கல்லூரிகள், ஆலயங்கள் போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய மதுக்கடைகளை பொதுமக்களுடைய வேண்டுகோளை ஏற்று, இப்போது கூடுதலாக 103 மதுக்கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதேபோல மற்ற FL2-வைப் பொறுத்தவரை, மாவட்ட காவல் கண்காணிப்பில் ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழு பரிந்துரை செய்ததன் அடிப்படையில், குறிப்பிட்ட இடங்களில் கேட்பவர்களுக்கு மட்டுமே அதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு உங்களுடைய ஆட்சியில் என்ன நடைமுறை இருந்ததோ, நீங்கள் என்ன செய்தீர்களோ அந்த நடைமுறையைத்தான் இப்போது பின்பற்றப்படுகிறதே தவிர, எங்கேனும் பொது மக்களுடைய எதிர்ப்புகள் இருந்து, கடைகள் மூடப்பட வேண்டுமென்று உறுப்பினர்கள் அவர்கள் சொன்னால், துறை ரீதியாக நிச்சயமாக நடவடிக்கை எடுத்து, இரண்டு நாட்களில் அதன்மீது உரிய நடவடிக்கை எடுத்து, அதற்கான உத்தரவுகள் வழங்கப்படும் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

பேரவைத் தலைவர் அவர்களே, பூரண மதுவிலக்கு பற்றிப் பேச வேண்டுமென்றால், அவரும், அவருக்கு அடுத்து மூன்றாவதாக அமர்ந்திருக்கிற அண்ணன் நத்தம் அவர்களும் பல்வேறு கருத்துகளை இந்த டாஸ்மாக் நிறுவனம் சம்பந்தமாக, மதுவிலக்குகள் சம்பந்தமாக இதே சட்டமன்றத்தில் பேசிய குறிப்புகள் அனைத்தையும் நான் கையில் வைத்திருக்கிறேன். அப்போது என்னென்ன பதில் சொன்னீர்கள், என்னென்ன விளக்கங்கள் சொன்னீர்கள் என்பது குறித்து எடுத்துச் சொல்வதற்கு எனக்கு நீண்ட நேரம் ஆகாது. ஆகவே, தேர்தலில் வாக்குறுதி கொடுக்கப்படாவிட்டாலும், அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. முதலமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுத்ததன் காரணமாகத்தான் 603 மதுக்கடைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் வி.செந்தில்பாலாஜி குறிப்பிட்டார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (20.03.2025) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் தலைமையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மானியக் கோரிக்கை தொடர்பாக ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட இயக்கக உயர் அலுவலர்கள் மற்றும் துறையின் கீழ் பணிபுரியும் அனைத்து மாவட்ட திட்ட அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசுச் செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அரசு கூடுதல் செயலாளர் ச.வளர்மதி, மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட இயக்குநர் மற்றும் குழும இயக்குநர் ஐ. எஸ். மெர்சி ரம்யா மற்றும் துறை உயர் அலுவலர்கள், மாவட்ட அலுவவர்கள் கலந்து கொண்டனர்.

### கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி சார்பில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## ஜெய.ராஜமூர்த்தி – கவிச்சுடர் கவிதைப்பித்தன் – நா.சந்திரபாபு– ந. இராமசாமி – போர்முரசு கதிரவன் பங்கேற்பு

பெங்களூரு, மார்ச் 22 - கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி சார்பில் முதலமைச்சர், தி.மு.க. தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் 72-வது பிறந்தநாள் விழா பெங்களூரில் விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

மார்ச் 23-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பெங்களூர் அலசூர் ஏரிக்கரை அருகே உள்ள பெங்களூர் தமிழ் சங்க அரங்கத்தில் இந்த விழா நடைபெறுகிறது.

கர்நாடக மாநில தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் இரா. அன்பு தமிழ் தாய் வாழ்த்து பாடி வரவேற்புரை ஆற்றுகிறார். கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி, தலைவர் முருகு தர்மலிங்கம் தலைமை தாங்குகிறார். பேராசிரியர் வணங்காமுடி, கழக முன்னோடி வி.எஸ். மணி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் இராஜசேகரன், முருகானந்தம், விகாஷ் ஆ.கரிகாலன், பிரபு திருமதி சற்குணா இளமதி, காயத்திரி பிரபு ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

கர்நாடக மாநில தி.மு.க. அமைப்பாளர் ந. ராமசாமி முன்னிலை வகிக்கிறார். மாநில நிர்வாகிகள், இலக்கிய அணி நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், தொ.மு.ச. நிர்வாகி கள், முன்னாள் இந்நாள் பொறுப்புக்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கலைஞரின் உடன்பிறப்புகள், கழக தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.

மருத்துவர். ஜெய.ராஜமூர்த்தி (இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை) கவிச்சுடர் கவிதைப்பித்தன், அரிமா டாக்டர் நா. சந்திரபாபு (தலைமை இலக்கிய அணி, பொருளாளர்) ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர். திருமதி. தங்கவயல், ஆ.கரிகால வளவன் விழா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குகிறார். முருகமணி செல்வம் நன்றி உரை ஆற்றுகிறார்.

விழாவில் கருத்தரங்கம் நடைபெறுகிறது. முத்துமணி நன்னன் தலைமை தாங்குகிறார். அண்ணா வழியில் அயராதுழைப்போம் என்ற தலைப்பில் ந.இராமசாமி அமைப்பாளர், கர்நாடக மாநில தி.மு.க. உரையாற்றுகிறார். ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம் என்ற தலைப்பில் தங்கவயல் ஸ்ரீதர் கர்நாடக மாநில தி.மு.க. உரையாற்றுகிறார்.

இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் என்ற தலைப்பில் தங்கவயல் கரிகாலன் உரையாற்றுகிறார்.

மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்ற தலைப்பில் கிரி துணை அமைப்பாளர், கலை இலக்கிய பேரவை உரையாற்றுகிறார். வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம் என்ற தலைப்பில் தங்கவயல். எ.வி.மதியழகன் உரையாற்றுகிறார்.

நாட்டியாஞ்சலி நிருத்தியாலயா நாட்டியக்குழுவினரின் திராவிடம் வளர்த்த திராவிட இயக்க பாடல்கள் அமைப்பு : திருமதி. சுப்புலக்குமி குழுவினர்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பாளராக கர்நாடக மாநில தி.மு.க. கழக இலக்கிய அணி செயலாளர் போர் முரசு கதிரவன் மேற்கொண்டு வருகிறார்.